இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

இயேசு தம் சீடர்களிடம் கூறியது: “பிற இனத்தவரிடையே தலைவர்கள் எனக் கருதப்படுகிறவர்கள் மக்களை அடக்கி ஆளுகிறார்கள். அவர்களுள் பெரியவர்கள் அவர்கள் மீது தங்கள் அதிகாரத்தைக் காட்டுகிறார்கள். ஆனால் உங்களிடையே அப்படி இருக்கக்கூடாது. உங்களுள் பெரியவராக இருக்க விரும்புகிறவர், உங்கள் தொண்டராய் இருக்கட்டும். உங்களுள் முதன்மையானவராக இருக்க விரும்புகிறவர், அனைவருக்கும் பணியாளராக இருக்கட்டும். ஏனெனில் மானிட மகன் தொண்டு ஏற்பதற்கு அல்ல, மாறாகத் தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்” என்று கூறினார். (மாற்கு 10:42-45)

# 16-வது உலக ஆயர் மாமன்றத்தின் முதல் கட்ட தயாரிப்பு மறைமாவட்டங்களில் தொடங்குகிறது

## ஆயர் செபஸ்தியன் அவர்களின் விளக்கமளிப்பு

மலேசியா-சிங்கப்பூர்-புருணை வட்டார கத்தோலிக்க ஆயர்கள் மன்றத்தின் ஆயர்களாகிய நாங்கள், 2023-ல் **‘உடன் நடத்தல்: ஒன்றிப்பு, பங்கெடுப்பு, மறைத் தூது’** எனும் கருப்பொருளில் நடைபெறவுள்ள 1 6 -வது உலக ஆயர்கள்




மாமன்றத்தின் மறைமாவட்ட அளவிலான திறப்பு நிகழ்வுக்கு நன்றிகூறக் கடமைப் பட்டுள்ளோம்.

ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் கொடுக்கப்பட்ட தயாரிப்பு வழிகாட்டிகளைக் கொண்டு வழிநடத்தப்படவுள்ள இந்த ஆயர்கள் மாமன்றத்திற்கான செயல்பாடு கள், திருஅவையில் வெறும் ஆவணங் களைத் தயாரிப்பதற்கானவை அல்ல. மறைவாட்டத்தின் அனைத்துநிலை இறை மக்களுக்கும் செவிசாய்த்தல் மற்றும் அவர்களுடன் கலந்துரையாடல் மேற்கொள் ளுதல் வழி சேகரிக்கப்படும் உண்மை நிலைகளைத் தொகுத்து, படிப்படியாக உச்சநிலை ஆமர்வுக்காக உரோமைக்குக் கொண்டு செல்வதாகும். இதன்வழி மனப்புண்களை ஆற்றி, நல்லுறவை நிலை நாட்டி, இழந்த நம்பிக்கைக்கு வலுவூட்டி, ஒருவர் ஒருவரிடமிருந்து கற்றுக்கொண்டு ‘உடன் பயணிக்கும் திருஅவைக்கான உருமாற்றம் ஏற்பட வேண்டும் என்பது இந்த மாமன்றத்தின் தலையாய நோக்கம்.

இந்த ‘உடன் நடத்தல்’ திருஅவைக்கான தூரநோக்கின் செயல்பாட்டுக்கு இறை மக்களாக, வாழ்க்கை, நம்பிக்கை, பண் பாடு மற்றும் ஏழையோரின் உள்ளத் தினராக, அருள்பணியாளர்கள், இருபால் துறவறத்தார் மற்றம் பொதுநிலையினர் யாவரையும் உள்ளடக்கிய மறைத்தூதுரைக் கான திருஅவையாக நாம் முன்னோக்கிச் செல்வோம்.

மேலும், திருத்தூதர்களின் திருஅவையாக, திருத்தூதர்களின் வழிமரபினர்களாக, திருத்தந்தையுடன் ஒன்றித்த ஆயர்களாக வும் முன்னோக்கி நடப்போம். அதே வேளையில், பன்முகத்தன்மையில் ஒற்று மையையும் அன்பு மற்றும் உண்மை ஆகியவற்றை கடைப்பிடித்தலிலும் உறுதி பெறுவோம்.

இந்த ‘உடன் பயணிக்கும் திருஅவைக்கான தூரநோக்கு நம்மை பின்வருவனவற்றுக்கு அழைக்கிறது:

1. **சுயமனமாற்றத்திற்கான பயணம் மேற்கொள்ள.**
2. **திருஅவையின் வழியாக, தூய ஆவியாரின் வழிகாட்டுதலுக்குக் கீழ்ப்படிய.**

2023-ல் நடைபெறவுள்ள 16-வது ஆயர் மாமன்றத்திற்கு இட்டுச் செல்லும் செயல் பாடுகள், ஒவ்வொரு உள்ளூர் திருஅவை யிலும் தொடங்கும் இவ்வேளையில் அவற்றில் உண்மையாகப் பங்கெடுப்பதன் வழி மேற்கண்ட இரு தூரநோக்குகளையும் நம்மால் அடைய இயலும்.

அகில உலக பாதுகாவலரான புனித யோசேப்பு மற்றும் திருஅவையின் தாயாகிய மரியா நமது மலேசியா-சிங்கப்பூர்-புருணை வட்டார திருஅவைக்காக பரிந்துரைப்பார் களாக.



நீங்கள் மேற்ண்ட ஆயர்கள் மன்றத்தின் அசல் அறிக்கையை கீழ்க்கண்ட அகப்பக்கத்தில் காணலாம்.
https://cbcmsb.org/synod-of-bishops-2023/

Sebastian Francis

தலைவர்,
ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ்,
மலேசியா-சிங்கப்பூர்-புருணை வட்டார கத்தோலிக்க ஆயர்கள் மாமன்றம்
(CBCMSB)

## கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தில் மனநலச் சேவை மையம் அமைந்தது

**காஜாங்:** உலக சுகாதார நிறுவனம் மனநல பிரச்சனைகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக, அக்டோபர் 10-ம் திகதியை ‘உலக மனநல தினம்’ என்று அறிவித்துள்ளது. இத்தினத்தை முன்னிட்டு, கோலாலம்பூர் மாமறை மாவட்டம் ‘ Shalom Careline’ எனும் உணர்வுப்பூர்வ ஆதரவு ஊடக மையம் ஒன்றைத் தோற்றுவித்தது.

காஜாங், திருக்குடும்பப் பங்கின் காலை 10 மணி திருப்பலிக்குப் பிறகு நிகழ்வுற்ற இந்த மையத்தின் அதிகாரப்பூர்வ திறப்பு நிகழ்வு பங்கின் இளையோர் வலையொளியில் (youtube) நேரடியாக ஒளிபரப்பு செய்யப் பட்டது. கேர்லைன் எனும் இப்பணிக் குழுவிற்குப் பொறுப்பேற்றிருக்கும் அருள் தந்தை பிலிப் சுவா அவர்கள் இந்த தொற்றுநோய் காலத்தில் இப்பணிக் குழுவானது தூய ஆவியாரின் ஒரு கொடை என்றார். மனவுளைச்சளுக்கும் ஆளாகும் அனைவருக்கும் தனது சேவையை வழங்க விருக்கும் இப்பணிக்குழுவை 03-2723 7272 என்ற எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்தார். இஸ்லாமியர் தவிர்த்து மற்றனைவரும், மனவுளைச் சலுக்கும் இதர மனம் சார்ந்த பிரச் சனைகளுக்கும், திங்கள் தொடங்கி ஞாயிறு வரை ஒவ்வொரு நாளும் காலை 10.00 மணித்தொடங்கி பிற்பகல் 1.00 வரையிலும், இரவு 7.00 தொடங்கி 11.00 வரையிலும் இப்பணிக்குழுவோடு தொடர்புகொள்ளலாம் என அவர் மேலும் கூறினார். இச்சேவை முற்றிலும் இலவசமாக வழங்கப்படுவதோடு, உதவி நாடி வருவோரின் விபரங்கள் அனைத்தும் இரகசியமாகப் பாதுகாக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.



அருள்தந்தை பிலிப் சுவா

இப்பணிக்குழுவிற்கு ஆலோசனையும் நல்லா தரவும் அளித்துவரும் பேராயர் ஜூலியன் லியாவ் அவர்களுக்கு நன்றி தெரிவித்து கொண்டார் அருள்தந்தை பிலிப் சுவா.



-*Gwen Manickam* (தமிழாக்கம் ஆர்.கே)

# 16-வது உலக ஆயர்கள் மாமன்றம் 2023-ல் கூடுகிறது

**வத்திக்கான்:** இவ்வாண்டு அக்டோபர் முதல் 2023-ம் ஆண்டு அக்டோபர் முடிய, ஈராண்டுகள், கத்தோலிக்கத் திருஅவையில் நடைபெறும் உலக ஆயர்கள் மாமன்றத்தின் தயாரிப்புத் திருப்பலியை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அக்டோபர் 10, கடந்த ஞாயிறன்று தலைமையேற்று நிறைவேற்றினார்.

16-வது உலக ஆயர்கள் மாமன்றத்தின் இறுதிக் கூட்டங்கள் 2023ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் வத்திக்கானில் திட்டமிடப்பட்டிருந்தாலும், இந்த மாமன்றம், இப்போது ஒவ்வொரு தலத்திருஅவைகளான ஒவ்வொரு மறைமாவட்டத்தின் பங்குகளிலிருந்தும் கூடுதல் பங்கேற்புடன் ஆரம்பமாகியுள்ளது என்பதை உணர்த்தும் வண்ணம், இம்மாமன்றத்தின் துவக்கத் திருப்பலியை, வத்திக்கான் புனித பேதுரு பேராலயத்தில் திருத்தந்தை நிறைவேற்றினார்.

திருஅவையில் துவங்கியுள்ள இம்மாமன்றம், சந்தித்தல், செவிமடுத்தல், மற்றும் தெளிந்து தேர்தல் ஆகிய மூன்று பண்புகளைக் கொண்டிருக்கவேண்டும் என்பதை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தன் மறையுரையின் மையக்கருத்தாகப் பகிர்ந்துகொண்டார்.

### சந்தித்தல்

இந்த ஞாயிறன்று வழங்கப்பட்டிருந்த நற்செய்தியை மையப்படுத்தி தன் மறையுரையைத் துவக்கியத் திருத்தந்தை, இந்த நற்செய்தியின் ஆரம்பத்தில், "இயேசு புறப்பட்டுச் சென்று கொண்டிருந்தபோது" என்று கூறப்பட்டிருந்த சொற்களைச் சுட்டிக்காட்டி, இயேசு, மக்களைச் சந்திப்பதில் ஆர்வமும் திறமையும் கொண்டிருந்ததைப்போல், நாமும், இந்த சந்திப்புக் கலையை வளர்த்துக்கொள்ள அழைக்கப்பட்டுள்ளோம் என்று எடுத்துரைத்தார்.

சந்திப்புக்கலையை வளர்ப்பதற்கு, இறைவனை நோக்கியும், அயலவரை நோக்கியும் திறந்தமனம் கொண்டிருப்பது, முதல்



தேவை என்பதை, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வலியுறுத்திக் கூறினார்.

### செவிமடுத்தல்

இறைவனையும், மனிதர்களையும் சந்திப்பதற்கு மிக முக்கியமான தேவை, செவிமடுக்கும் பண்பு என்பதை, தன் இரண்டாவது கருத்தாகக் கூறியத் திருத்தந்தை, எவ்வித முற்சார்பு எண்ணங்களும் இன்றி, திறந்த உள்ளத்துடன் செவிமடுப்பது, உண்மையிலேயே, திருஅவைக்கு மிகவும் தேவையான ஒரு பண்பு என்று கூறினார். ஒவ்வொரு தலத் திருஅவையிலிருந்தும் கேட்கப்படும் கேள்விகள், உணர்த்தப்படும் கவலைகள், மற்றும் நம்பிக்கைகள் ஆகியவற்றிற்கு செவிமடுப்பது இந்த மாமன்றத்தின் முக்கிய தயாரிப்பாக இருக்கவேண்டும் என்று திருத்தந்தை தன் மறையுரையில் தெளிவுபடுத்தினார்.

### தெளிந்து தேர்தல்

சந்தித்தல் மற்றும் செவிமடுத்தல் என்ற இரு நிலைகளும் தன்னிலேயே முடிவுகள் அல்ல மாறாக, அவற்றின் வழியே, அனைவரும் இணைந்து, சரியான தெரிவுகளை மேற்கொள்ள தெளிவுகள் உருவாக வேண்டும் என்று தமது மறையிரையில் மேலும் வலியுறுத்தினார்.

*ஜெரோம் லூயிஸ் - வத்திக்கான் செய்திகள்*

# 16-வது உலக ஆயர்கள் மாமன்றம் ஒரு கண்ணோட்டம்

திருத்தந்தை புனித 23-ஆம் யோவான் 1959-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இரண்டாம் வத்திக்கான் திருச்சங்கத்தைக் கூட்டவிருப்பதான தனது அறிவிப்பு அறிக்கையில், திருஅவையின் சன்னல்களைத் திறந்துவிட்டு, புதிய காற்று உட்புகட்டும் என்று வெளிப்படுத்திய திருஅவையின் ஒட்டுமொத்த ஏக்கத்தை நிறைவு செய்தார். திருஅவையின் நிறுவனராகிய ஆண்டவர் இயேசு தன் உயிர்ப்பின் ஆவியினால் திருஅவையைத் தொடர்ந்து புதுப்பித்துக்கொண்டு காலத்திற்கேற்ற தலைமைப் பொறுப்பாளராக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை இன்னாள்களில் நமக்குக் கொடையாகத் தந்துள்ளார்.

Synod என்னும் ஆங்கில சொல் கிரேக்க மொழியில் Syn – odos என்னும் இரு சொற்களின் பிணைப்பாகும். Syn என்பது "உடன்" (with / together) என்றும், odos என்பது "பாதை / பயணம்" (road / way) என்றும் பொருள்படும். எனவே "சினட்" (Synod) என்று சொல்லும்போது ஓர் இலக்கை நோக்கிய ஒருங்கிணைந்த கூட்டுப் பயணம் என்று பொருள்படடம். தமிழிலே "மாமன்றம்" "திருப்பேரவை" "திருச்சங்கம்" என்று குறிப்பிடுவது இத்தகைய முயற்சியின் அமைப்பையும் அது செயல்படும் முறையையும் குறிப்பதாகவுள்ளது.

### மாமன்றத்தின் அடையாளச் சின்னம்

⇒ விண்ணைத் தொடும் ஞானமும் ஒளியும் நிறைந்த பெரிய மரம். அபார வலிமையும் நம்பிக்கையும் கொண்டதாக அது சிலுவையைப் பிரதிபலித்து நிற்கிறது.

⇒ கதிரவன் போன்று ஒளி தரும் வட்ட வடிவிலான நற்கருணையை அது கனியாக்குகிறது. கைகளாக, சிறகுகளாக விரிந்துள்ள அதன் கிளைகள் தூய ஆவியாரையும் பிரதிபலிக்கின்றன.

⇒ இறைமக்கள் தேக்கநிலையில் இல்லாமல், பயணப்பட்டவர்களாய், 'சினட் ' என்றச் சொல்லின் பொருளுக்கேற்ப, இணைந்து பயணிக்கின்றனர்.

⇒ இந்த வாழ்வின் மரம் அவர்கள் அனைவருக்குள் சுவாசமாக்கும் பொதுமையான இயக்க உந்துதலால், மரத்திலிருந்தே தங்கள் பயணத்தை இறைமக்கள் தொடங்குகின்றனர்.

⇒ இக்கூட்டப் பயணத்தில் இடம் பெற்றுள்ள 15 நிழல் உருவங்கள் நம் மனிதத்தின் அனைத்து வாழ்க்கைச் சூழல்களையும், தலைமுறையினரையும், துவக்க நிலைகளையும் தங்களுக்குள் கொண்டுள்ளன.

⇒ இந்தப் பன்முகத்தன்மையை வலியுறுத்தும் ஒளிமயமான பல வண்ணங்களே மகிழ்ச்சியின் அடையாளங்களாய் உள்ளன.

⇒ இளையோர், முதியோர், ஆண்கள், பெண்கள், இளம் பருவத்தினர், குழந்தைகள், பொதுநிலையினர், துறவறத்தோர், பெற்றோர்கள், தம்பதியர்கள், தனியோர், ஆரோக்கியமானவர்கள், சிறப்பு மக்கள் அனைவருமாக சம தளத்தில் பயணிக்கும் இவர்களின் மத்தியில் எத்தகைய படிநிலை அமைப்பும் (திருத்தந்தை. ஆயர்கள், அருள்பணியாளர்... ) இல்லை. ஆயரும் துறவறத்தோரும் அவர்களின் முன்னிலையில் இல்லாமல், அவர்களுக்கிடையே உள்ளனர்.




ஒன்றிணைந்த நடப்பு, உடன் நடத்தல், இணைந்து பயணித்தல் எனப்பொருள்படும் சினட் என்னும் மாமன்றத்தைத் திருஅவைக்கு அறிமுகம் செய்துள்ள திருத்தந்தை பிரான்சிஸ், 2021ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 10ஆம் தேதி ஞாயிறன்று உரோமையில் இம்மாமன்றத்தின் பாதை யைத் திறந்து வைக்கின்றார்.

அதனைத் தொடர்ந்து உலகெங்குமுள்ள மறைமாவட்டங்களின் ஆயர்கள் அக்டோபர் மாதம் 17ஆம் தேதி (இன்று) ஞாயிறு வழிபாட்டில் தத்தம் மறைமாவட்டங்களில் இம்மாமன்ற செயல்பாட்டை தொடங்கி வைக்கிறார்கள்.

சந்திப்போம்- செவிமடுப்போம்-
தெளித்து தேர்வோம்

**மறைத்தூது ஞாயிறு**
**(Mission Sunday)**

**அடுத்த வாரம் 24-10-2021, ஆண்டின் பொதுக்காலம் 30-ம் ஞாயிறன்று மறைத்தூது ஞாயிறு கொண்டாடப்படுகிறது.**

**கருப்பொருள்**
**'நாங்கள் கண்டதையும் கேட்டதையும் எடுத்துரைக்காமலிருக்க எங்களால் முடியாது' (தி.ப.4:20)**

# பணியேற்போம்! தாள்பணிவோம் !

இன்று ஆண்டின் பொதுக்காலத்தின் 29-ம் ஞாயிறு, கிறிஸ்தவத்தின் தலைமைத்துவம் பற்றி சிந்திக்கவும் செயல்படவும் நாம் அழைக்கப்படுகிறோம். இயேசு வெளிப்படையாக "உங்களில் தலைவராக இருக்க விரும்புகிறவர் தொண்டராகவும் முதன்மையானவராக இருக்க விரும்புகிறவர் கடையவராகவும் இருக்கட்டும்" என்கிறார்.

புனித பவுல் அடிகளார் நாம் செய்கின்ற நல்ல செயல்களை, பணிகளை, தொண்டுகளை பார்த்து விண்ணவர் மண்ணவர் கீழுலகோர் மேலுலகோர் அனைவரும் நம்மை பணிந்து வணங்குவர், பாராட்டுவர் என்கிறார் (பிலிப்பு 2:10). மண்ணுலகில் நாம் செய்த நல்ல செயல்கள் மற்றவர்கள் இதயத்திலிருந்து ஒரு போதும் நீங்காது.

விண்ணுலகம் செல்ல விரும்புவோர்க்கு அவர்களது நல்ல சிந்தனை, சொல், செயல்கள், நடத்தை அனைத்தும் மேலானவையாக இருக்கும் என்பது நிச்சயம். நாமும் வாழ்ந்தால் அவர்களைப் போல வாழவேண்டும் என்ற ஆர்வம் ஏற்படும். முதலில் சொல்லால் செயலால் கடமையால் தகுதி பெறுவோம் பலனை கடவுள் உறுதி செய்வார்.

நம்மில் பெரும்பாலானவர்கள் எல்லாவற்றிலும் எனக்கு முதலிடம் கொடுக்கப்படட வேண்டும் என்று நினைக்கிறோம். அது குடும்பமாக இருந்தாலும், நிறுவனமாக இருந்தாலும் நாம் முதன்மையான இடம் வகிக்கவேண்டும் என்றுதான் நினைக்கின்றோம். ஆனால் அதற்கு உண்மையிலேயே நாம் தகுதி உடையவர்களாக இருக்கிறோமா என்றால் நிச்சயமாக இருக்காது.

இயேசு கொண்டிருந்த மனநிலையைப் பற்றி கூறும் பவுலடியார் "தம்மையே வெறுமையாக்கி அடிமையின் வடிவை ஏற்றார்" என்கிறார் (பிலி 2: 7) இதையே இரண்டாம் வாசகமும் "நம் தலைமைக் குரு நம்முடைய வலுவின்மையைக் கண்டு இரக்கம் காட் இயலாதவர் அல்ல; மாறாக எல்லா வகையிலும் நம்மைப் போல சோதிக்கப் பட்டவர்" என எபி 4:15 கூறுகிறது.

பொதுவாக மக்கள் தொண்டு ஆற்ற முன்வரும் சீடர் இயேசுவைப்போல உயிரைக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கும் பணியாளராக இருக்க வேண்டும். கடவுளால் மக்கள் தொண்டு ஆற்ற தேர்ந்து கொள்ளப்படும் சீடர் துன்புறும் ஊழியராக இருக்கிறார். அவர் நொறுக்கப்படவும் வதைக்கப்படவும் வேண்டும். தம் உயிரைக் குற்ற நீக்கப் பலியாக தர வேண்டும். இயேசு சீடர்களின் காலடிகளைக் கழுவும் நிகழ்வு அவர் ஆட்சியின் வலப்புறமும் இடப்புறமும் அதிகாரத்தோடு அமர் விரும்பும் சீடருக்குச் சிறந்த பாடம். அவர் செய்தது போல செய்ய வேண்டியதே அவர் வழி செல்ல விரும்பும் சீடர் கற்றுக்கொள்ள வேண்டிய அன்றாட வாழ்க்கைப் பாடம்.

இயேசுவின் சீடர்களாக, அவருடைய பணியாளர்களாக வாழ நம்மிடத்தில் அடிப்படையாக இருக்க வேண்டியது தாழ்ச்சி மட்டுமே. ஆகவே நான் பெரியவன் உயர்ந்தவன் என்ற ஆணவத்தை அகற்றி எல்லாருக்கும் நான் பணியாளன் என்ற மனநிலையில் பணிவோடும் தாழ்ச்சியோடும் வாழ்வோம். இறையருள் நிறைவாய் பெறுவோம்.

ஆவி. டேவிட, குளுவாங்

**பொதுக்காலம் 29-ஆம் ஞாயிறு**

| | |
|---|---|
| 1-ம் வாசகம்: | எசா 53:10-11 |
| தி. பாடல்: | 33: 4-5. 18-19. 20, 22 |
| 2ம் வாசகம்: | எபி 4: 14-16 |
| நற்செய்தி: | மாற்கு 10: 35-45 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2**
**வாரநாள் முதல் வாசகம் –ஆண்டு 1**
**திருப்புகழ் மாலை -வாரம் 1**